# JSR IAS ACADEMY

## பொது தமிழ்

## 6ம் வகுப்பு புதிய புத்தகம்

## இயல் 1

# இன்பத்தமிழ்

*"தமிழுக்கும் அமுதென்றுபேர்! – அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!*
*தமிழுக்கு மணமென்று பேர்!- இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*

- **பாரதிதாசன்**



- பாரதிதாசன் இயற்பெயர் - சுப்புரத்தினம்
- பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரை- பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்
- சிறப்பு பெயர்கள் - புரட்சிக்கவி, பாவேந்தர்
- பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடமை பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துக்களை பாடியுள்ளார்.
- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்ற நூலில் தமிழ் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

**தமிழுக்கு:**

- விளைவுக்கு - நீர்
- அறிவுக்கு - தோல்
- இளமைக்கு - பால்
- புலவருக்கு - வேல்
- அசதிக்கு - தேன்
- உயர்வுக்கு - வான்
- கவிதைக்கு - வயிரத்தின்வாள்

*"தமிழே உயிரே வணக்கம் தாய் பிள்ளை*
*உறவாம்மா உனக்கும் எனக்கும்"*

- காசி ஆனந்தன்



JSR IAS ACADEMY

# தமிழ்க் கும்மி

*"ஊழி பல நூறு கண்டதும் அறிவு ஊற்றெனும் நூல் பல கொண்டதுவாம்"*

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## சொல்லும் பொருளும்

- ஆழிப் பெருக்கு - கடல் கோள்
- மேதினி - உலகம்
- ஊழி – நீண்டதொரு காலப்பகுதி
- உள்ளப்பூட்டு – உள்ளத்தின் அறியாமை

* ஆசிரியர் - பெருஞ்சித்திரனார்
* இயற்பெயர் - மாணிக்கம்
* சிறப்பு பெயர் - பாவலரேறு, தனித்தமிழையும், தமிழ் உணர்வையும் பரப்பிய பாவலர்.

## இயற்றிய நூல்கள்:

1. கனிச்சாறு
2. கொய்யாக்கனி
3. பாவியக் கொத்து
4. நூறாசிரியம்

## நடத்திய விதவுகள் :

1. தென்மொழி
2. தமிழ்ச்சிட்டு
3. தமிழ் நிலம்

* தமிழ்க்கும்மி இடம்பெற்ற நூல் - கனிச்சாறு
* இந்த நூல் **எட்டு** தொகுதிகளாக வெளிவந்துள்ளது.
* தமிழ் உணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது - கனிச்சாறு

*"வான் தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி*
*மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி*
*தேன் தோன்றியது போல மக்கள் நாவில்*
*செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி'*

- வாணிதாசன்



JSR IAS ACADEMY

# வளர்தமிழ்

- மனிதரை பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தி, மேம்படுத்திக் காட்டுவது - மொழி
- பிறர் கருத்தை நாம் அறிய உதவுவது - மொழி
- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன,
- உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்று திகழும் முத்தமிழ் மொழிகளில் ஒன்று - தமிழ் மொழி.

> **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" - பாரதியார்**
> **"என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்!" – பாரதியார்**

## தொன்மை:

- இலக்கியம் தோன்றிய பிறகு இலக்கணம் விதிகள் தோன்றியிருக்க வேண்டும்.
- தமிழில் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் – தொல்காப்பியம். அது ஒரு இலக்கண நூல்.

## எளிமை:

- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுவது - உயிர்மெய்
- வலஞ்சுழி எழுத்துக்கள் - அ, எ, ஔ, ண, ஞ.
- இடைச்சுழி எழுத்துக்கள் - ட, ய, ழ.
- தமிழில் வலஞ்சுழி எழுத்துக்களே அதிகம்.

- **தமிழ்** என்றம் சொல் முதலில் இடம்பெற்ற இலக்கியம் - தொல்காப்பியம்

  ***"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே"*** - தொல் (386).

- **தமிழ்நாடு** என்று சொல் முதன் முதலில் இடம் பெற்ற இலக்கியம் - சிலப்பதிகாரம் வஞ்சிக்கண்டம் (165)

  ***"இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய***
  ***இதுநீ கருதினை ஆயின்"***



JSR IAS ACADEMY

- **தமிழன்** என்னும் சொல் முதலில் இடம்பெற்ற இலக்கியம் - அப்பர் தேவாரம்.

*“தமிழன் கண்டாய் (திருத்தாண்டகம்-23)*

## சீர்மை:

- சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும்.
- அஃறினை = அல் + திணை (உயிர் அல்லாத திணை)
- பாகற்காய் = பாகு + அல் + காய் (இனிப்பு அல்லாத காய்)

## வளமை:

- சங்க இலக்கியங்கள் – எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.
- இலக்கண நூல் - தொல்காப்பியம்.
- அறநூல்கள் - திருக்குறள், நாலடியார்.
- காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை.
- பூவின் **ஏழு** நிலைகள்
    - அரும்பு
    - மொட்டு
    - முகை
    - மலர்
    - அலர்
    - வீ
    - செம்மல்
- மா - சொல்லின் பொருள்: மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு,

தாவர இலை பெயர்கள்

1. ஆல், அரசு, மா, பலா, வாழை, - இலை
2. அகத்தி, பசலை, முருங்கை - கீரை
3. அருகு, கோரை - புல்
4. நெல், வரகு - தாள்
5. மல்லி - தழை
6. சப்பாத்தி, கள்ளி, தாழை - மடல்
7. கரும்பு, நாணல் - தோகை
8. தென்னை, பனை - ஓலை
9. கமுகு (பாக்கு) - கூந்தல்

- நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்வும் உதவுவது - மொழி

## வளர் தமிழ்:

- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.
- இயல்தமிழ் - எண்ணத்ததை வெளிப்படுத்தும் ;
- இசைத்தமிழ் - உள்ளத்ததை மகிழ்விக்கும்;
- நாடகத்தமிழ் - உணர்வில் கலந்து வாழ்வின், நிறைகுறைகளைச் சுட்டிக்ககாட்டும்.

## புதுமை மொழி:

- இணையம், முகநூல், புலனம், குரல்ததேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை ஆகிய புதிய சொற்கள் உருவாகி உள்ளது.
- மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது எண்களின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.
- தொல்காப்பியம், நண்ணூல் போன்றவை கணினிமொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தை பெற்றுள்ளது.

தமிழ் எண்களை அறிவோம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | க௦ |

| வ.எண் | சொல் | இடம்பெற்ற நூல் |
|---|---|---|
| 1 | வேளாண்மை | கலித்தொகை, திருக்குறள் |
| 2 | உழவர் | நற்றிணை |
| 3 | பாம்பு | குறுந்தொகை |
| 4 | வெள்ளம் | பதிற்றுப்பத்து |
| 5 | முதலை | குறுந்தொகை |
| 6 | கோடை | அகநானூறு |
| 7 | உலகம் தொல்காப்பியம், கிளவியாக்கம் | திருமுருகாற்றுப்படை-1 |
| 8 | மருந்து | அகநானூறு, திருக்குறள்2 |
| 9 | ஊர் | தொல்காப்பியம், |
| 10 | அன்பு | தொல்காப்பியம், திருக்குறள் |
| 11 | உயிர் | தொல்காப்பியம், திருக்குறள் |
| 12 | மகிழ்ச்சி | தொல்காப்பியம் |
| 13 | மீன் | குறுந்தொகை |
| 14 | புகழ் | தொல்காப்பியம் |
| 15 | அரசு | திருக்குறள் |
| 16 | செய் | குறுந்தொகை |
| 17 | செல் | தொல்காப்பியம், |
| 18 | பார் | பெரும்பாணாற்றுப்படை |
| 19 | ஒழி | தொல்காப்பியம் |
| 20 | முடி | தொல்காப்பியம் |

JSR IAS ACADEMY

# கனவு பலித்தது

- இவ்வுலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது என்ற அறிவியல் உண்மையை உணர்த்தும் நூல் - தொல்காப்பியம்

  *"நிலம் தீ நீர் வலி விசும்பொடும் ஐந்து*
  *கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"* - தொல்

- உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியவர் - தொல்காப்பியர்.
- கடல் நீர் ஆவியாகி மேகமாகும் பின்னர் மேகம் குளிர்ந்து மழையாக பொழியும் என்ற அறிவியல் செய்தி இடம்பெற்ற நூல் - முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார் நார்ப்பது, திருப்பாவை.

  *"கடநீர் முகந்த கமஞ்சூழ எழிலி"* - கார் நார்ப்பது.

- திரவப்பொருட்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவை சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்தை கூறியவர் - ஔவையார்.

  *"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்*
  *நாழி முகவாது நால் நாழி "*

- வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி இடம்பெற்ற நூல் - பதிற்றுப்பத்து

  *"நெடு வெள்ளுசி நெடுவசி பரந்த வடு"*

- சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தி இடம் பெற்ற நூல் - நற்றிணை .

  *"கோட்சுறா எற்றினச் சுருங்கிய*
  *நரம்பின் முடி முதிர் பரதவர்"*

- அறுவை சிகிச்சை முறைகளை அறிய முடிகிறது.
- தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்ற செய்ய முடியும் என்ற கருத்தை கூறியவர் - கலீலியோ
- இக்கருத்து இடம்பெற்ற நூல் - திருவள்ளுவமாலை.

  *"தினையளவு போதாச் சிறும்புலநீர் நீண்ட,*
  *பனையளவு காட்டும்"* - கபிலர்.



JSR IAS ACADEMY

JSR IAS ACADEMY

# தமிழ் எழுத்துக்களின் வகையும் தொகையும்

- தமிழ் இலக்கணம் 5 வகைப்படும்
    1. எழுத்து இலக்கணம்
    2. சொல் இலக்கணம்
    3. பொருள் இலக்கணம்
    4. யாப்பு இலக்கணம்
    5. அணி இலக்கணம்

## எழுத்து இலக்கணம்:

- ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் - எழுத்து.

**உயிர் எழுத்துகள்:**

- உயிருக்கு முதன்மையானது காற்று.
- இயல்பாக காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.
- குறில் - அ, இ, உ, எ, ஒ (5).
- நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (7).

- எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு - மாத்திரை.
- குறில் எழுத்து ஒலிக்கும் கால அளவு - ஒரு மாத்திரை
- நெடில் எழுத்து ஒலிக்கும் கால அளவு இரண்டு மாத்திரை.
- மெய் எழுத்து ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை.
- ஆயுத எழுத்து ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை.
- குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள் - குறில்.
- நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் - நெடில்.
- கண்ணிமைக்கவும் ஒரு முறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவு -ஒரு மாத்திரை.

## மெய்யெழுத்துகள்:

- மெய் என்பது உடம்பு, இவற்றை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது
- வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
- மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
- இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

## உயிர்மெய்:

- உயிர் (12) + மெய் (18) = உயிர்மெய் (216).
- உயிர்மெய் நெடில் = 126
- உயிர்மெய் குறில் = 90.
- எ.கா - 1 + 1 + 1 + ½ = 3 ½ மாத்திரை.

## கலைச் சொற்கள்:

- வலஞ்சுழி - Clock wise
- இடஞ்சுழி - Anti-Clock wise
- இணையம் - Internet
- குரல்தேடல் - Voice Search
- தேடுப்பொறி - Search engine
- தொடுதிரை - Touch Screen
- முகநூல் - Facebook
- செயலி - App
- புலனம் - Whatsapp
- மின்னஞ்சல் - E-mail

JSR IAS ACADEMY

# சிலப்பதிகாரம்

-இளங்கோவடிகள்

*“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்”*

## சொல்லும் பொருளும்:

- திங்கள் - நிலவு
- கொங்கு - மகரந்தம்
- அலர் - மலர்தல்
- திகிரி - ஆணைச்சக்கரம்
- பொற்கோட்டு - பொன்மயமான சிகரத்தில்
- மேரு - இமயமலை
- நாமநீர் - அச்சம் தரும் கடல்
- அளி - கருணை

- சிலப்பதிகாரத்தை இயற்றியவர் – இளங்கோவடிகள்.
- இவர் **சேர மரபை** சேர்ந்தவர்.
- காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு .
- ஐம்பெரும் காப்பியங்கள் ஒன்று சிலப்பதிகாரம்
- இதுவே தமிழில் முதல் காப்பியம்
- வேறுபெயர்: முத்தமிழ் காப்பியும், குடிமக்கள் காப்பியம்.
- இரட்டைக் காப்பியங்களுள் - சிலப்பதிகாரம், மணிமேகலை .
- இயற்கையை வாழ்த்துவதாக தொடங்கும் நூல் - சிலப்பதிகாரம்.



JSR IAS ACADEMY

# காணி நிலம்

*தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்*
*துய்ய நிறத்தினதாய் – ஓர் மாளிகை*
*கேணி அருகினிலே – கீற்றும் இளநீரும்*
*முத்துச் சுடர் போலே – நிலாவொளி*
*சித்தம் மகிழ்ந்திடவே இளம் தென்றல் காற்று.*

- பாரதியார்

- ஆசிரியர் - பாரதியார் .
- இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் - பாரதியார்.
- இயற்பெயர் - சுப்பிரமணியன்.
- இளமையிலேயே சிறப்பாக கவி பாடும் திறன் பெற்றவர் **எட்டயபுர மன்னரால் பாரதி** என்னும் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.
- தம் கவிதை வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர் .
- மண்ணுரிமைக்காகவும், பெண்ணுரிமைக்காகவும் பாடியவர் .
- நாட்டுப்பற்று, மொழிப்பற்று மிக்க பாடல் பலவற்றை படைத்தவர்.
- **படைப்புகள்**:
  - பாஞ்சாலி சபதம்.
  - கண்ணன் பாட்டு.
  - குயில் பாட்டு.
- காணி நிலம் என்னும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் - பாரதியார் கவிதைகள்.
- சொல்லும் பொருளும்:
  - காணி - நில அளவை குறிக்கும் சொல்.
  - சித்தம் - உள்ளம்
  - மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்

JSR IAS ACADEMY

# சிறகின் ஓசை

- பறவைகள் இடம் பெயர்தல் - வலசை போதல்.
- நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன.
- பறவைகள் இடம்பெயர காரணம்

  உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம்.
- நிலவு, விண்மீன், புவி ஈர்ப்பு புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பறவைகள் இடம் பெயர்கின்றன
- வடக்கில் இருந்து தெற்கு நோக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பறவைகள் வலசை போகின்றன.
- வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்.
  - கற்றையாக முடி வளர்தல்
  - தலையில் சிறகு வளர்தல்
  - இறகுகளின் நிறம் மாறுதல்.
- பறவைகள் வலசை வருவது பற்றி பாடிய தமிழ் புலவர் - சத்திமுத்து புலவர். *"நாராய் நாராய் செங்கால் நாராய்"*
- "*தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்*" இன்னும் அடிகள் பறவைகள் வலசை வந்து செய்தியை குறிப்பிடுகின்றன.
- 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.
- தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவை இனம் - சிட்டுக்குருவி .
- கூடு கட்டி வாழும் பறவையினம் - சிட்டுக்குருவி
- இமயமலை தொடரில் **4000 மீட்டர்** உயரத்தில் கூட வாழும் பறவை – சிட்டுக்குருவி.
- **காக்கை, குருவிகள் எங்கள் சாதி** என்று பாடியவர் பாரதியார்.
- சிறகடிக்காமல் கடலை தாண்டி பறக்கும் பறவை - கப்பல் பறவை .
- தரையிறங்காமல் 400 கி.மீ வரை பறக்கும்.
- கப்பல் கழைக்கூடா, கடற்கொள்ளை பறவை என்று அழைக்கப்படுகிறது - கப்பல் பறவை (Frigate bird).
- **"மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழ முடியும் பறவைகள் இல்லாத உலகில் மனிதரால் வாழ முடியாது என்றவர்"** - சலீம் அலி.
- இன்றைய பறவையியல் ஆய்வாளர்களின் முன்னோடி - டாக்டர் சலீம் அலி.
- இந்தியாவின் பறவை மனிதர் – டாக்டர். சலீம் அலி
- சலீம் அலியின் வாழ்க்கை வரலாற்று நூல் - சிட்டுக்குருவியின் வீழ்ச்சி.



JSR IAS ACADEMY

- உலகிலேயே நெடுந்தொலைவு 22,000 கி மி பயணம் செய்யும் பறவையினம் - ஆர்டிக் ஆலா
- பறவை பற்றிய படிப்பு - ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY) எனப்படும்.
- உலக சிட்டுக்குருவிகள் - நாள் மார்ச் 20 .

## கிழவனும் கடவுளும்

- கிழவனும் கடலும் என்ற ஆங்கிலேய புதினம் நோபல் பரிசு பெற்ற ஆண்டு – 1954
- கிழவனும் கடலும் நூலின் ஆசிரியர் - எர்னெஸ்ட் ஹெமிங்கே .

JSR IAS ACADEMY

# முதலெழுத்தும் சார்பெழுத்தும்

- எழுத்து இரண்டு வகைப்படும்
    - முதல் எழுத்து (30)
    - சார்பெழுத்து (10)
- உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18 - முதலெழுத்துக்கள்.
- சார்பு எழுத்து பத்து வகைப்படும்.
    1. உயிர்மெய்
    2. ஆயுதம்
    3. உயிரளப்பெடை
    4. ஒற்றளப்பெடை
    5. குற்றியலுகரம்
    6. குற்றியலிகரம்
    7. ஐகாரக் குறுக்கம்
    8. ஔகாரக் குறுக்கம்
    9. மகர குறுக்கம்
    10. ஆய்த குறுக்கம்

## உயிர்மெய்

- மெய்யெழுத்துகளும் உயிரெழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் தோன்றும் எழுத்துகள் - உயிர்மெய்.
- உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும்.
- ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதலெழுத்துகளை சார்ந்து வரும் எழுத்துக்கள் - சார்பெழுத்து.

## ஆயுதம்

- மூன்று புள்ளிகள் உடைய தனித்து வடிவம் - ஆயுதம்.
- வேறு பெயர் - முப்புள்ளி, முப்பாற் புள்ளி, தனிநிலை, அஃகேனம்.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்று சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.



JSR IAS ACADEMY

## கலைச்சொற்கள்:

1. கண்டம் - Continent
2. வலசை - Migration
3. தட்பவெப்பநிலை - Climate
4. புகலிடம் - Sanctuary
5. வானிலை - Weather
6. புவிஈர்ப்புப்புலம் - Gravitational field

JSR IAS ACADEMY

# திருக்குறள்

## கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

- அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம். அதுபோல ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

## வான் சிறப்பு

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

- மழை உரியகாலத்தில் பெய்யாது போனால், உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.*

- உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

## நீத்தார் பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

- முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் பெரியோர்; முடியாது என்பவர் சிறியோர்.

## மக்கட்பேறு

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

- தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.*

- தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

## அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.*

- அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

JSR IAS ACADEMY

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

- அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும் தான்.

**இனியவை கூறல்**

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

- பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணிகலன்கள் ஆகும். மற்றவை அணிகலன்கள் ஆகா.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.***

- இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது.

- ஆசிரியர் - திருவள்ளுவர்.
- 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட - காலம்
- எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் நெறிகளை வகுத்தவர் - திருவள்ளுவர்.
- வேறுபெயர்கள் - வான் புகழ் வள்ளுவர் தெய்வப் புலவர், பொய்யில் புலவர்.
- திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- திருக்குறள் 133 அதிகாரங்கள், 1330 குறள்பாக்களை கொண்டது.
- திருக்குறளின் சிறப்பு பெயர்கள்:
    - உலக பொதுமறை
    - வாயுறை வாழ்த்து
- 100க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



JSR IAS ACADEMY

# அறிவியல் ஆத்திச்சூடி

*அறிவியல் சிந்தனை கொள்*
*ஆய்வில் மூழ்கு*
*இயன்றவரை புரிந்துகொள்*
*ஈடுபாட்டுடன் அணுகு*
*உண்மை கண்டறி*
*ஊக்கம் வெற்றிதரும்*
*என்றும் அறிவியலே வெல்லும்*
*ஏன் என்று கேள்*
*ஐயம் தெளிந்து சொல்*
*ஒருமித்துச் செயல்படு*
*ஓய்வற உழை*
*ஔடதமாம் அனுபவம்*
**நெல்லலை சு. முத்து**

## சொல்லும் பொருளும்:

- இயன்றவரை - முடிந்தவரை
- ஒருமித்து - ஒன்றுபட்டு
- ஔடதம் - மருந்து

- ஆசிரியர் - நெல்லை சு. முத்து
- "**தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்**" என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்ட பெற்றவர்.
- 80க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.
- விக்ரம் சாராபாய், விண்வெளி மையம், சதீஷ் தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர்.
- ஆத்திசூடி என்பது அகர வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்.
- ஆத்திசூடி - ஔவையார்
- புதிய ஆத்திசூடி - பாரதியார்
- அறிவியல் ஆத்திசூடி - நெல்லை சு. முத்து



JSR IAS ACADEMY

*"வானை அளப்போம் கடல் மீனையளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்*
*சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்"*

- பாரதியார்.

# கனியனின் நண்பன்

- ரோபோ என்ற சொல்லை முதன்முதலாக பயன்படுத்தியவர் - செக் நாட்டு நாடக ஆசிரியர் காரல் கபெக்.
- ரோபோ என்னும் சொல்லின் பொருள் - அடிமை.
- இவை தோற்றத்தில் மனிதர் போல இல்லாமலும் இருக்கலாம் ஆனால் மனிதர்களைப் போல செயல்களை நிறைவேற்றும் என தானியங்கிகளும் விளக்கம் அளித்தது - பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம்.
- டிப் புளு என்னும் மீத்திறன் கணினியை உருவாக்கிய நிறுவனம் - ஐ.பி.எம்.
- உலகிலேயே முதன்முதலாக சவுதி அரேபியா ஒரு ரோபோவுக்கு குடியுரிமை வழங்கியுள்ளது.
- அந்த ரோபோவின் பெயர் - சோபியா
- ஐக்கிய நாடுகள் சபை சோபியாவுக்கு வழங்கிய பட்டம் - புதுமைகளின் வெற்றியாளர்.

# ஒளி பிறந்தது

- விளக்குகள் பல தந்த ஒளி என்னும் நூலின் ஆசிரியர் வில்லியம் வாட்சன்.
- கலாம் அவர்களுக்குப் பிடித்த புத்தகங்கள்
  - திருக்குறள்
  - விளக்குகள் பல தந்த ஒளி.
- அப்துல் கலாம் அவர்களுக்கு தமிழில் மிகவும் பிடித்த நூல் திருக்குறள்

  **'அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
  **உள்ளழிக்கல் ஆகா அரண்'**

JSR IAS ACADEMY

## மொழி முதல், இறுதி எழுத்துக்கள்

- மொழி என்பதற்கு சொல் என்னும் பொருள் உண்டு.
- சொல்லின் முதலில் வரும் எழுத்துக்களை மொழி முதல் எழுத்து எனலாம்.
- **மொழி முதல் எழுத்துக்கள்**
  - i. உயிர் எழுத்துக்கள் 12
  - ii. க, ச, த, ந, ப, ம வரிசைகளில் உள்ள அனைத்து உயிர்மெய் எழுத்துக்கள்.
  - iii. ங, ஞ, ய, வ - வரிசையில் சில உயிர்எழுத்துக்கள் .
    - ங - ஙனம் மட்டுமே - 1
    - ஞ - வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ - 4
    - ய - வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ - 6
    - வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ - 8
- **மொழிக்கு முதல் வராத எழுத்துக்கள்** :
  - i. மெய்யெழுத்துக்கள் – 18
  - ii. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன வரிசையில் ஒரு எழுத்துக்கள் கூட வராது
  - iii. ஆய்த எழுத்து
  - iv. ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில்மொழி முதல் எழுத்துக்களைத் தவிர.
- **மொழி இறுதி எழுத்துக்கள்**:
  - சொல்லின் இறுதியில் வரும் எழுத்துக்கள் .
  - உயிர் எழுத்துக்கள் 12ம் உயிர்மெய்யாக மட்டுமே இறுதியில் வரும்.
  - ஞ், ண், ந், ம், ய் , ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின்இறுதியில் வரும். (உரிஞ், வெரிந், அவ்).

> டமாரம், ரம்பம், லண்டன். ஃப்ரான்ஸ், டென்மார்க், போன்றவை பிறமொழிச் சொற்கள். இவற்றைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதுகிறோம்.



JSR IAS ACADEMY

## மொழி இறுதியாகா எழுத்துக்கள்:

- சொல்லில் இறுதியில் உயிர் எழுத்துக்கள் தனித்து வருவதில்லை அளபெடை எழுத்துக்களில் மட்டுமே இறுதியில் வரும்.
- ஆய்த எழுத்து சொல்லில் இறுதியில் வராது.
- 'ங' எழுத்து வரிசை வராது.
- எகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயிர்மெய் எழுத்தும் மொழி இறுதியில் வருவதில்லை.
- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.



## சொல்லின் இடையில் வரும் எழுத்துக்கள்:

- மெய் எழுத்துக்கள் - 18.
- உயிர்மெய் எழுத்துக்கள்.
- ஆய்த எழுத்துக்கள்.
- அளபெடையில் வரும் உயிர் எழுத்துகள்.

### சி.வி. இராமன்

- இராமன் விளைவு என்னும்கண்டுபிடிப்பு வெளியிடப்பட்ட நாள் - 1928 பிப்ரவரி 28.
- இக்கண்டுபிடிப்பு இந்தியாவற்கு அறிவியலுக்கான முதல்நோபல் பரிசை பெற்றுத் தந்தது.
- பிப்ரவரி 28 - தேசிய அறிவியல் நாள்.

### கலைச்சொல் அறிவோம்.

- செயற்கை நுண்ணறிவு - Artificial Intelligence
- மீத்திறன் கணினி - Super Computer
- செயற்கைக் கோள் - Satellite
- நுண்ணறிவு - Intelligence

JSR IAS ACADEMY

JSR IAS ACADEMY

## வினா - விடை:

1. தாய் மொழியில் படித்ததால் **மேன்மை** அடையலாம்
2. தகவல் தொடர்பு முன்னனேற்றத்ததால் **வானம்** சுருங்கிவிட்டது
3. 'செந்தமிழ்' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **செம்மமை + தமிழ்**.
4. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **பொய் + அகற்றும்**
5. பாட்டு+ இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **பாட்டிருக்கும்**
6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **எட்டுத்திசை**

## வினா - விடை:

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் **பழமை**.
2. 'இடப்புறம்' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **இடது + புறம்**.
3. 'சீரிளமை' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **சீர்மமை + இளமை**.
4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **சிலப்பதிகாரம்**.
5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **கணினித்தமிழ்**.
6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் **பாரதியார்**
7. 'மா' என்னும் சொல்லின் பொருள் **வானம்**.

## வினா - விடை:

1. 'தட்பவெப்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது தட்பம் + வெப்பம்.
2. 'வேதியுரங்கள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது வேதி + உரங்கள்.
3. தரை + இறங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் தரையிறங்கும்

4. வழி + தடம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் வழித்தடம்.
5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி துருவப்பகுதி.
6. மிக நீண்டதொலைவு பறக்கும் பறவை ஆர்டிக் ஆலா.
7. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் சத்தி முத்தப் புலவர்.
8. பறவைகள் இடம்பெயர்வதற்கு வலசை போதல் என்று பெயர்.
9. இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி.
10. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று தட்ப வெப்ப நிலை மாற்றம்.

**வினா - விடை:**

1. உடல் நோய்க்கு **ஔடதம்** தேவை.
2. நண்பர்களுடன் **ஒருமித்து** விளையாடு.
3. 'கண்டறி' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **கண்டு + அறி.**
4. 'ஓய்வற' என்னும் சொல்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **ஓய்வு + அற.**
5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **ஏனென்று.**
6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **ஔடதமாம்.**

**வினா-விடை**

1. மனிதன் எப்போதும் உண்மமைமையயே **உரைக்கின்றறான்.**
2. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **ஆழம் + கடல்**
3. விண்வவெளி என்னும் செர்லலைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விண் + வெளி.**
4. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **நீலவான்**
5. இல்லலாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **இல்லாதியங்கும்.**